

# பெண்குழந்தைகளின் குட்டை பாவாடை

**இந்த வீடியோ-லே,உங்க குழந்தைக்காக, பளிச்சுன்னு இருக்கிற , லேயர் வெச்ச ஸ்கர்ட்-, தைக்கறது பத்தி, கத்துக்கப்போறீங்க**



வயசு இருக்கிற குழந்தைகளுக்கு ஏத்த, லேயர்ட் ஸ்கர்ட் தைக்கறதுக்கு, உங்களுக்குத்தேவையானது - ரெண்டு துணி -ஒண்ணு, சேடின்- துணி, ரெண்டா மடிக்கும் போது,அதனோட நீளம், 20.5- அங்குலமும்,அகலம் 23.5- அங்குலமும் இருக்கணும்.இன்னொண்ணு லேஸ்-,துணி, ரெண்டா மடிக்கும் போது,அதனோட நீளம், 16.5- அங்குலமும்,அகலம் 23.5- அங்குலமும் இருக்கணும், மேட்சிங் த்ரெட், நீளமானஎலாஸ்டிக்,சே꞉ப்டி பின்பீடட் பின்- எல்லாம் வேணும்.

முதல்லே, சேடின்- துணியை எடுத்துக்கலாம்.

இது நீளம், .. இது, அகலம்.

இது துணியோட ராங் சைட்,இது, ரைட் சைட்

சேடின்- துணியை, இந்த மாதிரி, ரைட் சைட்- ஒண்ணை ஒண்ணு பார்க்கற மாதிரி,மடிச்சுக்கங்க.

பீடட் களாலே, பின்- பண்ணுங்க.

லேஸ் -னுடைய  ரைட் சைட்- , ஒண்ணை ஒண்ணு பார்க்கற மாதிரி,மடிச்சுக்கங்க.மறுபடியும் பீடட் பின்- களாலே, பின்- பண்ணுங்க.




பின்- பண்ண ரெண்டு பக்கங்களையும் தனித்தனியா தைக்கலாம்.

இப்போ, மெஷினை, செட்- பண்ணிக்கங்க. - ஸ்ட்ரெயிட் ஸ்டிச்
க்காக, ஐ, பேட்டர்ன் செலக்டரை A-லேயும், ஸ்டிச் லென்த்
-ஐ, 2 ½ -லேயும், செட்- பண்ணுங்க.

முதல்லே,ரிவர்ஸ் ஸ்டிச் போட்டு,முதல் லேயர்- னுடைய, அதாவது சேடின்- துணியுடைய பின்- பண்ண பக்கத்தை, தைக்க ஆரம்பியுங்க.தைச்சுகிட்டு வரும் போதே,பின்-களை எடுக்க மறந்திடாதீங்க.முடிக்கும் போதும் ரிவர்ஸ் ஸ்டிச்- போடுங்க.

அதே மாதிரி, லேஸ்- துணியோட, பின் - பண்ண பக்கத்தை தைக்க ஆரம்பியுங்க

எக்ஸ்ட்ரா - நூலை வெட்டிடுங்க.

பக்க ஓரங்களை நாம தைச்சு முடிச்சிட்டோம்.

அடுத்து, சேடின்- துணியிலே, ஹெம்- பண்ணலாம். லேஸ்-துணி ஓரம் ஸ்கேலப்ட்-ஆ, இருக்கறதனாலே,அதை ஹெம்- பண்ணவேண்டிய அவசியம் இல்லை.

½ - அங்குலம் மடிச்சு, அதுக்கு பிறகு, ¾ அங்குலம் மடிக்கணும்,... இந்த மாதிரி.அப்புறம் பின்- பண்ணனும்.

பின்- பண்ண ஓரத்திலேயே தையுங்க,தைக்கும் போது, பின்-களை எடுத்திடுங்க.

ரெண்டு துணியையும்,வெளிப்பக்கமா திருப்புங்க.அதாவது, ரைட் சைட்- வெளிப்புறம் இருக்கணும்.தைச்ச ஓரங்கள் உள்பக்கம் இருக்கணும்.

சேடின் - துணியை, லேஸ் துணிக்கு உள்ளே, வையுங்க.- சேடின்துணியோட ரைட் சைட்- துணியோட ராங் சைட்-ஐ, ஃபேஸ்- பண்ற மாதிரி இருக்கணும், நான் எப்படி செய்யறேன்னு, பாருங்க.

ரெண்டு துணியுடைய, பக்கவாட்டு ஓரங்களை, இந்த மாதிரி ஃப்ளாட்டன்- பண்ணி விடுங்க.ரெண்டு ஓரங்களையும் மேட்ச்- பண்ணி, பின்- பண்ணுங்க.









ரெண்டு துணியையும் மேல் பக்கத்திலே சேர்த்து மடியுங்க. முதல்லே ½ -அங்குலமும்,அப்புறம், 1¾- அங்குலமும் மடியுங்க, இந்த மாதிரி,.... அப்புறம் பின்- பண்ணுங்க.

பக்க ஓரத்தையல்-லே இருந்து, 5½-அங்குலம், அளந்து, mark- பண்ணிக்கங்க. 5½-அங்குலம் மார்க்- பண்ண இடத்திலே இருந்து,
1½ அங்குலம் தள்ளி இன்னொரு மார்க்- பண்ணுங்க. மார்க்- பண்ண ஒரு பாயிண்ட்-லே இருந்து ஆரம்பிச்சு, சுத்தி தைச்சு, இன்னொரு பாயிண்ட்-லே, கொண்டுவந்து முடிக்கணும்.

1 ½ அங்குல ஓப்பனிங்- அப்படியே இருக்கும்,அங்கே, எலாஸ்டிக்-ஐ நுழைக்கணும்.பின்- பண்ண ஓரமாவே தையுங்க, முதல்லேயும், கடைசியிலேயும்,மறக்காம, ரிவர்ஸ் ஸ்டிச்- போடணும்.

தைக்கும் போது, பின்களை எடுத்துடுங்க. எலாஸ்டிக் -ஐ, ஸ்கர்ட்- மேலே வெச்சு, இப்படி, அளந்துக்கங்க. 2½ அங்குலம்,அதிகமா விட்டு, மீதியை கட்- பண்ணுங்க.

சேஃப்டி பின்- உதவியாலே, எலாஸ்டிக் -ஐ, ஓப்பனிங் - வழியா பாஸ்- பண்ணுங்க.

எலாஸ்டிக் -னுடைய இன்னொரு முனை, நழுவிடாம இருக்கறதுக்கு, ஓப்பனிங்-ஓட, அதை, சேர்த்து பின்- பண்ணிடுங்க.

இன்னொரு முனைக்கு எலாஸ்டிக்- வந்துடுச்சுன்னா,ரெண்டு முனையிலே இருந்தும் பின்களை எடுத்திடுங்க.அப்புறம் இந்த மாதிரி,.. முனைகளை ஓவர்லேப்- பண்ணி, ரெண்டையும் சேர்த்து, பின்- பண்ணுங்க. கேஸிங்- முழுசும், எலாஸ்டிக் -, ஸ்ட்ரெயிட் -ஆ, இருக்கிற மாதிரி பார்த்துக்கங்க. எலாஸ்டிக் - னுடைய ரெண்டு முனைகளையும், இந்த மாதிரி ஸ்டிச் - பண்ணுங்க. ஓவர்லேப் - பண்ண இடத்திலே, ரெக்டாங்கிள்-ஆ தைச்சுக்கங்க.நீங்க மூலைகளைத் திருப்பும் போது,ஊசி முனை எலாஸ்டிக் -லேயே இருக்கணும்.

கேஸிங்-க்குள்ளே, எலாஸ்டிக்-ஐ, ஸ்ட்ரெயிடென் - பண்ணிக்கங்க.அடுத்து, நாம ஓப்பனிங்-ஐ, மூடிடலாம். ஓப்பனிங்-ஐ,சில தையல்கள் போட்டு, மூடிடலாம். எக்ஸ்ட்ரா த்ரெட் -ஐ, கட்- பண்ணிடுங்க. உங்க, லேயர்ட் பேபி ஸ்கர்ட்- தயார்.

லேயர்ட் ஸ்கர்ட் உங்க குழந்தைகளுக்கு நல்லா இருக்கும்,அது, சந்தோஷத்தையும்,உற்சாகத்தையும் கொடுக்கும். நீங்க வேற விதமான துணியிலே,வேற விதமான looks- கிடைக்கற மாதிரி செய்து பாருங்க.